

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.10.2025) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

## திருப்பெரும்புதூர் அருகே பிள்ளைப்பாக்கம் ‘சிப்காட்’ தொழில் பூங்காவில்

# ரூ.75 கோடி மதிப்பில் மின்னணு உற்பத்தி மையம்!

## தமிழ்நாடு அரசு டெண்டர்!

சென்னை, அக்.5-

திருப்பெரும்புதூர் அருகே பிள்ளைப்பாக்கம் சிப்காட் தொழில் பூங்காவில் 75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மின்னணு உற்பத்தி மையம் அமைக்க தமிழ்நாடு அரசு டெண்டர் கோரியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டம் திருப்பெரும்புதூரை அடுத்த பிள்ளைப்பாக்கம் சிப்காட் தொழிற்பூங்காவில், மின்னணு உற்பத்தி குழும திட்டத்தின் கீழ், மின்னணு உற்பத்தி மையம் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதில், 75 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின்னணு உற்பத்தி பொருட்கள் வடிவமைப்பு மையம், மின்சார வாகனங்களின் பேட்டரி மற்றும் அதன் சார்ஜர் பரிசோதனை மையங்கள், சூரிய ஒளி மின் பயன்பாடு பொருட்களின் சோதனை மையம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை அமைக்கப்பட உள்ளது.

இதற்காக டெண்டர் கோரி தமிழ்நாடு அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.10.2025) முகாம் அலுவலகத்தில், கழக அயலக அணி மாநிலத் துணைச் செயலாளர் பரிதி இளம்சுருதி எம்.சி., தனது பிறந்தநாளையொட்டி சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# மதுரை - மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு ஏற்பாடுகள்!

## அமைச்சர்கள் பி.மூர்த்தி – பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தனர்!

மதுரை, அக். 5 -

வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தலைமையில் நேற்று (04.10.2025) மதுரையில் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு ஏற்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி, வருவாய்த்துறை, காவல்துறை, பொதுப்பணித்துறை, இந்து சமய அறநிலையத் துறை போன்றதுறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்திற்கு அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்பு, திருக்கோயில்களுக்கு 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டிய குடமுழுக்கு மிக அதிக கவனமும், அக்கறையும் கொண்டு இதுவரை 3,707 திருக்கோயில்களுக்கு நடைபெற்றுள்ளது. இந்து சமய அறநிலையத்துறையில் வரலாற்றில் இவ்வளவு அதிக எண்ணிக்கையில் இந்த ஆட்சியை தவிர, வேறு எந்த ஆட்சிக் காலத்திலும் குடமுழுக்குகள் நடைபெற்றதில்லை. தமிழ்நாட்டிலுள்ள சுமார் 46,310 திருக்கோயில்களில் பல்வேறு திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, மருதமலை, வயலூர் போன்ற முருகன் திருக்கோயில்களுக்கு வெகுவிமரிசையாக குடமுழுக்கு நடைபெற்றுள்ளன.

அந்த வகையில், மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு பணிகளை விரைவுபடுத்திட முதலமைச்சர் அவர்களிடம் இறையன்பர்கள் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இன்றைய தினம் மதுரையில் ஆய்வுக் கூட்டத்தினை நடத்தினோம். மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்திட ரூ. 23.70 கோடி மதிப்பீட்டில் 186 திருப்பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதில் திருக்கோயில் நிதி ரூ.8.90 கோடி மதிப்பீட்டில் 117 திருப்பணிகளும், உபயதாரர் நிதி ரூ.14.80 கோடி மதிப்பீட்டில் 69 திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனைத்து பணிகளும் வரும் டிசம்பர் மாதத்திற்குள் இறுதி வடிவம் பெறும்.

2018 ஆண்டு பிப்ரவரி மாதம் ஏற்பட்ட தீவிபத்தினால் வீரவசந்த ராயர் மண்டபத்தின் கட்டுமானங்கள் உருகுலைந்தன. இதனை மறுசீரமைக்க 15 அடி நீளமுள்ள கருங்கல் தூண்கள் தேவைப்பட்டன. இத்தகைய நீளமுள்ள கருங்கற்கள் இங்குள்ள குவாரிகளில் கிடைப்பது கடினமாக இருந்ததால் மறுசீரமைப்பு பணியில் சற்று தொய்வு ஏற்பட்டது. தற்போது 15 அடி நீளமுள்ள கருங்கற்கள்கிடைக்கப்பெற்று, அவற்றை கொண்டு வரும் பணி தொடங்கியுள்ளது. ரூ. 35.30 கோடி மதிப்பீட்டில வீரவசந்தராயர் மண்டபத்தின் மறுசீரமைப்பு பணிக்கு 79 கருங்கல் தூண்கள் தேவைப்படுகின்றன. இதுவரை 18 வடிவமைப்புடன் கூடிய தூண்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இன்னும் 61 கருங்கல் தூண்கள் நிர்மாணிக்கப்பட வேண்டும். அவற்றில் 40 தூண்கள் வரப்பெற்று, அதில் 10 தூண்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு நாட்களில் 10 தூண்களும். வரும் அக்டோபர் 15 ஆம் தேதிக்குள் 11 தூண்களும் பணிகள் நடைபெறும் இடத்திற்கு வந்து சேரும் என பொறியாளர்கள் தெரிவித்துள்ளனர். அனைத்து கருங்கல் தூண்களும் வந்து சேர்ந்த பின்னர் வடிவமைப்பு பணிகளை மேற்கொண்டு வரும் 2026 பிப்ரவரி மாதத்திற்குள் குடமுழுக்கு நிறைவு பெறும்.

வீரவசந்தராயர் மண்டபத்தினை தவிர்த்து திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தலாமா என்பதனை குடமுழுக்கில் தேர்ச்சிப் பெற்ற ஆகம வல்லுநர்களான பிச்சை குருக்கள். செல்வம் குருக்கள், ராஜா பட்டர் போன்றவர்களோடு கலந்தாலோசித்து, அப்படி நடத்தலாம் என்றால் முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு சென்று, அனுமதி பெற்று, மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்கு வரும் டிசம்பர் மாதமே குடமுழுக்கு நடத்தி விடுவோம். வீரவசந்தராயர் மண்டபத்தோடு சேர்த்துதான் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த வேண்டும் என்று தெரிவித்தால் வரும் 2026 பிப்ரவரி மாதத்திற்குள் குடமுழுக்கு பணிகள் நிறைவு பெறும்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் உபக்கோயில்களாக 18 திருக்கோ யில்கள் அமைந்துள்ளன. அவற்றில் 9 திருக்கோயில்களுக்கு ஏற்கனவே குடமுழுக்கு நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. வரும் நவம்பர் மாதத்திற்குள் 4 உபக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட உள்ளது. இதர உபக்கோயில்களுக்கும் வரும் 2026 பிப்ரவரி மாதத்திற்குள் குடமுழுக்கு நடத்தப்படும்.

தேர்தலுக்கும் எங்களது ஆன்மிகப் பணிக்கும் எவ்வித சம்மந்தமுமில்லை. இந்த அரசு போர்க்கால அடிப்படையில் அனைத்து பணிகளையும் கையாளுகின்ற அரசு. கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் நடக்கும் சூழலில் பாலம் கட்டுகின்ற இடமானது மக்களே நடந்து செல்ல இயலாத இடமாக இருந்தபோதிலும் இந்த மாவட்டத்தின் அமைச்சர் பெருமக்கள், பொதுப்பணித்துறை அமைச்சர் ஆகியோர் மேற்கொண்ட பணிகளால் பாலப் பணிகளும் தடைபடாமல், கள்ளழகரையும் பச்சை பட்டு உடுத்தி ஆற்றிலே இறங்க வைத்து மகிழ்ச்சியுற வைத்தோம். அந்த வகையில் குடமுழுக்கு பணிகளை அனைத்தையும் 3 மாதங்களுக்குள் முடித்துக் காட்டுவோம் என்று தெரிவித்தார்.

பின்னர், அமைச்சர் பெருமக்கள் மற்றும் அலுவலர்கள் மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயிலில் நடைபெற்று வரும் பணிகள் நேரில் கள ஆய்வு செய்தனர்.

இக்கூட்டத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், மதுரை மாவட்ட ஆட்சியர் கே.ஜெ. பிரவீன் குமார், மதுரை மாநகராட்சி ஆணையர் திருமதி சித்ரா விஜயன், திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் திருமதி ருக்மணி பழனிவேல்ராஜன் மற்றும் அறங்காவலர்கள், இணை ஆணையர்கள் சி.மாரியப்பன், என்.சுரேஷ் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கலைஞர் பல்கலைக் கழக மசோதா!

# ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிட வேண்டும்!

## உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு!

சென்னை, அக்.5-

கலைஞர் பல்கலைக் கழக மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்க உத்தரவிடக்கோரி, உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

கும்பகோணத்தில் கலைஞர் பெயரில் பல்கலைக்கழகம் அமைப்பதற்கான சட்ட மசோதா கடந்த ஏப்ரல் மாதம், தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. கலைஞர் பெயரில் அமைக்கப்படும் பல்கலைக்கழகத்துக்கு வேந்தராக முதலமைச்சரை நியமிக்கவும் மசோதாவில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. துணைவேந்தர் நியமன மசோதா உள்ளிட்டவை தொடர்பான வழக்குகளில், 3 மாதங்களுக்குள் மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது குறித்து முடிவெடுக்க வேண்டும் என்று ஆளுநருக்கு உச்சநீதிமன்றம் கெடு விதித்திருந்தது. ஆனால் கலைஞர் பல்கலைக்கழக மசோதா நிறைவேற்றப்பட்டு 3 மாதங்களாக ஒப்புதல் அளிக்காமல் இருந்த ஆளுநர் ஆர்.என். ரவி, கடந்த ஆகஸ்ட் மாதம் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைத்தார். மசோதாவை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிய செயலுக்கு எதிராக எதிராக உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது.

மசோதாவை ஆளுநர் குடியரசு தலைவருக்கு அனுப்பிய செயல் சட்டவிரோதமானது என்றும், அரசியல் சாசனப் பிரிவு 163, 200க்கு எதிரானது என்றும் அறிவிக்குமாறு தமிழ்நாடு அரசு கோரியுள்ளது.

ஆளுநரின் முடிவை ரத்து செய்து, மசோதாவை ஆளுநருக்கே குடியரசுத் தலைவர் திருப்பி அனுப்ப உத்தரவிடவும் வலியுறுத்தியுள்ளது. அரசியல் சாசன பிரிவு 200ன் படி, மசோதாவுக்கு ஆளுநர் ஒப்புதல் வழங்க உத்தர விட வேண்டும் என்று தமிழ்நாடு அரசு தாக்கல் செய்துள்ள மனுவில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

# கிண்டி - அரசினர் தொழிற் பயிற்சி நிலைய பட்டமளிப்பு விழா!

## அமைச்சர் சி.வி.கணேசன் மாணவ – மாணவியருக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்!

சென்னை, அக்.5-

கிண்டி அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் நேற்று (04.10.2025) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்கள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

தமிழ்நாட்டில் 132 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களும், 311 தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இதில் வருடந்தோறும் 50,000 க்கும் மேற்பட்ட மாணவ - மாணவியர் சேர்ந்து பயிற்சி பெற்று வருகின்றனர். இத்தொழிற் பயிற்சி நிலையங்களுக்கான தொழிற் தேர்வுகள் ஒவ்வொரு ஆண்டும் அனைத்து மாநிலங்களுக்கும் சேர்த்து அகில இந்திய அளவில் ஒரே தேர்வாக நடத்தப்படுகிறது.

இதில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 27,480 அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவியரும் மற்றும் 19,280 தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவியரும் ஆக மொத்தம் 46,760 மாணவ மாணவியர் பங்கேற்றனர். அதில் 26,447 (96.24%) அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவியரும், 16,621 (86.21%) தனியார் தொழிற்பயிற்சி நிலைய மாணவ மாணவியரும், ஆக மொத்தம் 43,068 (92.10%) மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். கடந்த ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 96% மாணவர்கள் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இந்த ஆண்டு தேர்வு முடிவுகள் 04.09.2025 அன்று அறிவிக்கப்பட்டு தற்போது அனைத்து தொழிற் பயிற்சி நிலையங்களிலும் பட்டமளிப்பு விழா நடைபெற்று வருகிறது. இதில் கிண்டி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் அவர்கள் கலந்து கொண்டு மாணவ - மாணவியர்களை பாராட்டி சான்றிதழ் வழங்கினர்.

தற்போது வெளியிடப்பட்ட தேர்வு முடிவுகளில் கிண்டி அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 305 மாணவ - மாணவியரும், கிண்டி (மகளிர்) அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் 125 மாணவியரும் மற்றும் திருவான்மியூர் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் 75 மாணவ - மாணவியரும் ஆக மொத்தம் 505 மாணவ-மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

அவர்களுக்கான தேசிய தொழிற் சான்றிதழ் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும், அமைச்சர் பேசுகையில், முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களாக தரம் உயர்த்தப்பட்டதால் இந்த ஆண்டில் சாதனை படைக்கும் விதமாக 40 மாணவ - மாணவியர் அகில இந்திய அளவில் முதலிடம் பெற்றுள்ளனர் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கூடுதல் இயக்குநர்கள் தி.ராஜசேகர், இரா. மகேஸ்வரன், வேலை வாய்ப்பு பயிற்சி மற்றும் பயிற்சித்துறை இணை இயக்குநர் (சென்னை) ஆர். பிரபாகரன், அரசு அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# வங்கிகளில் காசோலைகள் மூலம் ஒரே நாளில் பணப்பரிவர்த்தனை!

## ரிசர்வ் வங்கி அறிவிப்பு!

புதுடெல்லி, அக். 5-

வங்கிகளில், காசோலைகள் மூலம் ஒரே நாளில் பண பரிவர்த்தனை செய்யும் நடைமுறை, இன்று முதல் அமலுக்கு வருகிறது.

வங்கிகளில், காசோலைகள் மூலம் நடைபெறும் பண பரிவர்த்தனைகளுக்கு 3 நாட்கள் வரை தேவைப்பட்டு வந்தது. இந்நிலையில், ஒரே நாளில் காசோலைகள் மூலம் பண பரிவர்த்தனை செய்யும் வகையில் இந்திய ரிசர்வ் வங்கி, புதிய வழிகாட்டுதல்களை வழங்கியுள்ளது. அதன்படி, இன்று முதல் அனைத்து வங்கிகளிலும் காசோலைகள் மூலம் ஒரே நாளில் பண பரிவர்த்தனை செய்யும் நடைமுறைகள் அமலுக்கு வருகிறது. இந்த புதிய நடைமுறை 2 கட்டங்களாக செயல்படுத்தப்படும் என்று தெரிவித்துள்ள ரிசர்வ் வங்கி, இன்று முதல் வரும் ஜனவரி 3ம் தேதி வரை முதல் கட்டமும், ஜனவரி 3க்குப் பிறகு இரண்டாம் கட்டமும் செயல்படுத்தப்படும் எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ், காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை காசோலைகளுக்கு பணம் வழங்குவதற்கான உறுதிப்படுத்துதல் பணிகள் நடைபெறும் என்றும், காசோலையைப் பெற்ற வங்கி, அதனை ஸ்கேன் செய்து கிளியரிங் மையத்துக்கு அனுப்ப வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர், கிளியரிங் மையம் காசோலையின் படத்தை பணம் செலுத்தும் வங்கிக்கு அனுப்பும் என்றும், பணத்தை வழங்கும் வங்கி காசோலையில் பணத்தை வழங்கலாம் அல்லது கூடாது என்ற உறுதிப்படுத்தலை வழங்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில், மிக முக்கியமான அம்சமாக, இதற்கு காலாவதி நேரம் வரையறுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. 50 ஆயிரம் ரூபாய்க்கும் அதிகமான தொகை கொண்ட, முன்தேதியிட்ட காசோலைகளையும் செலுத்தலாம் எனவும் வாடிக்கையாளர்களுக்கு வங்கிகள் பரிந்துரைத்துள்ளன. இதன்மூலம், முன்கூட்டியே விவரங்கள் சரிபார்க்கப்பட்டு, குறித்த நேரத்தில் பண பரிவர்த்தனை தொடர்பான நடைமுறைகள் நிறைவடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார்குடியில் பிரமாண்ட நவீன பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா நேரில் ஆய்வு!

திருவாரூர், அக்.05.

மன்னார்குடி நகராட்சியில், ரூ.46.46 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம், எதிர்வரும் 12.10.2025 ஞாயிறு அன்று, தொழில் துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா, மாவட்டச்செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. ஆகியோர்களின் முன்னிலையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் கே.என். நேரு அவர்களால் திறந்து வைக்கப்பட இருக்கிறது .

நகரின் மத்தியில் பிரமாண்டமாய் அமைக்கப்பட்டிருக்கும் இந்த நவீன பேருந்து நிலையத்தில் 200க்கும் மேற்பட்ட சிறுவணிக கடைகளும் ,ஏ.டி.எம் .உள்ளிட்ட அத்யாவசிய வசதிகளும், பொதுசுகாதார வசதி, வாகன நிறுத்த வசதிகளுடன் காற்றோட்டமான பேருந்து நிறுத்த வசதியும் செய்யப்பட்டுள்ளது.

பெருந்தலைவர் காமராஜ் அவர்களின் பெயர் சூட்டப்பட்ட இந்த அதிநவீன பேருந்து நிலைய கட்டுமனப்பணிகள் முடிவடைந்து வரும் நிலையில், பேருந்து நிலையத்தை தொழில்துறை அமைச்சர் டி.ஆர். பி.ராஜா அவர்கள் அரசு அதிகாரிகள் முன்னிலையில் பார்வையிட்டு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட ஆய்வுகள் மேற்கொண்டார்.

இந்நிகழ்வில் நகர செயலாளர் வீரா.கணேசன், நகர்மன்ற தலைவர் மன்னை. த.சோழராஜன், வர்த்தகர் சங்க தலைவர் ஆர்.வி.ஆனந்த், ஒன்றிய செயலாளர்கள் டி.எஸ். டி.முத்துவேல், சித்தேரி சிவா, நா.கவியரசு, கே.வி. கே.ஆனந்த், மாவட்ட பிரதிநிதி ஜே.உத்தமன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் நகர்மன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.



காஞ்சிபுரம் மாவட்டம்,ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோவூர் ஊராட்சியில் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாமை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் துவக்கி வைத்து பார்வையிட்டார். அருகில் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஊராட்சி மன்றத் தலைவர் ப.சுதாகர், ஒன்றியக்குழு உறுப்பினர் அன்பழகன் மற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை, கிண்டி, அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் நேற்று (04.10.2025) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் அகில இந்திய தொழிற் தேர்வில் தேர்ச்சி பெற்ற தொழிற்பயிற்சி மாணவர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் கூடுதல் இயக்குநர்கள் தி.ராஜசேகர், இரா. மகேஸ்வரன், வேலைவாய்ப்பு பயிற்சி மற்றும் பயிற்சித்துறை இணை இயக்குநர் (சென்னை) ஆர்.பிரபாகரன், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.